SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

NEWS RELEASE

சென்னை, 18 ஏப்ரல் 2026

# ஸ்ரீ இராமச்சந்திராவில் பட்டமளிப்பு விழா

ஸ்ரீ இராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது. முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. P.N. பிரகாஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

பல் மருத்துவம், மருந்தாக்கியல், செவிலியர் கல்வி, இயன்முறை சிகிச்சை, துணை மருத்துவ அறிவியல், பொது சுகாதாரத்துறை, மருத்துவ ஆராய்ச்சித்துறை, மேலாண்மை அறிவியல், செயல்முறை மருத்துவம், பொறியியல் மற்றும் தொழிற்நுட்பம், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி அறிவியல், உயிரி மருத்துவம் மற்றும் தொழிற்நுட்பம், கேட்பியல் மற்றும் பேச்சு மொழி பயிற்சி ஆகிய துறைகளில் 421 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

விழாவில் உரையாற்றிய நீதிபதி திரு. P.N. பிரகாஷ் உலகிலேயே இந்தியாவில்தான் அதிக அளவு இளைஞர்கள் உள்ளனர். இளம் பட்டதாரிகளாகிய நீங்கள் நம் நாட்டை ஊழல் இல்லாத நாடாக மாற்ற வேண்டும். மாணவர்களின் கல்விசார் சாதனைகளைவிட திறன்களும் நடைமுறை அறிவும் இன்றியமையாதவை, பட்டம் பெறுவது கற்றலின் முடிவாக இல்லாமல் தொடர்ந்து கற்றல் மற்றும் மருத்துவ திறன்களை மேம்படுத்த வேண்டும். மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு தொழிற்நுட்பங்களை பயன்படுத்துபவர்களாக மட்டும் இல்லாமல் புத்தாக்கல்களை உருவாக்கும் படைப்பாளிகளாகவும், ஆராய்ச்சியாளர்களாக மாற வேண்டும் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் இணைதுணைவேந்தர் திரு. R.V. செங்குட்டுவன், ஸ்ரீ இராமச்சந்திரா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளையின் அறங்காவலர் திருமதி. சம்யுக்தா வெங்கடாசலம், இணைதுணைவேந்தர் Dr. மகேஷ் வக்கமுடி, மருத்துவக்கல்லூரி தலைவர் Dr. K. பாலாஜி சிங், பதிவாளர் Dr. S. செந்தில்குமார், ஆய்வுத்துறை தலைவர் Dr. P. வெங்கடாசலம், பல் மருத்துவக்கல்லூரி தலைவர் Dr. H. தமிழ்செல்வன், தேர்வுகள் கண்காணிப்பாளர் Dr. R. பத்மாவதி மற்றும் பிறதுறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

………..

Issued by ….Mr. D. Sivagnanavel, Head-Media & Corporate Relations, SRIHER, 9444 448616.
Ms. P. Kavitha, Sr. Executive, Media Relations, SRIHER, 9444066154.